RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt2041

# இசையும் ஆளுமையும்' சமூக உளவியல் தளங்களிலே இசைக்கலையினை அடிப்படையாகக் கொண்ட ஒரு பண்பாட்டு இசையியலாய்வு

**சுகன்யா அரவிந்தன் [அ,*]**

[அ] இசைத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், இலங்கை.

# 'Music and Personality' A Study of Cultural Musicology Based on the Art of Music in the Socio-Psychological Deck

**Suganya Aravindan [a,*]**

[a] Department of Music, University of Jaffna, Jaffna, Sri Lanka.

* Corresponding Author: saravinthon@hotmail.com

Received : 15-04-2020
Accepted : 28-07-2020

**ABSTRACT**

Music is unique among Arts. From the genesis of humanity, it has a strong history. Beyond the boundaries of Arts, music has certain characteristic capabilities which enable the mankind to develop and modify its intrinsic quality. In the beginning it grew along with emotions of mankind. With the growth of science and mental maturity, it has been restricted into the frame of 'Art'. Music cherished itself accordingly to the accepting capacity and laws of the society, for ages and operated the doctrine is a fact in the history. This article concentrates through an inter-disciplinary approach on the influence of music in the personality development of human beings as the universal research fields are multi-facet.

**Keywords:** Art, Personality development, Exposure of emotions, Social psychology, Cultural exchange

## ஆசிரியர் குறிப்பு



இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே இசைத்துறையிலே முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றிவரும் **முனைவர். திருமதி. சுகன்யா** அவர்கள் கர்நாடக இசை மேடைக்கலைஞர் என்பகற்கப்பால் துறைசார்ந்த ஒரு ஆய்வாளரும் கூட. பல உள்நாட்டு மற்றும் சர்வதேசக் கரத்தரங்குகளிலே பங்குகொண்டு பல ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பித்திருக்கின்ற ஒரு இசையியலாளர். 'இசைக்கலையும் ஆசிரியத்துவமும்' 'இசையியலும் ஆய்வியலும்' உள்ளிட்ட ஆறு நூல்களை எழுதியுள்ளார்.

## அறிமுகம்

உலகப் பொது நிலையில் வைத்து இனங்கண்டு கொள்ளக்கூடியதாகவும், புரிந்து கொள்ளக்கூடியதாகவும் வாழ்வுக்கு மனிதன் செய்யும் வியாக்கியானமே கலையாகும். மனிதனது கருத்துக்கள் படிமங்களாக கலையில் படைக்கப்படுகின்றன. உணர்ச்சியைத் தூண்டுவதே கலைகளின் நோக்கமாகும். இவ்வுணர்வு நிலையானதொரு மனப்பதிவை ஏற்படுத்தி சிந்தனையைத் தூண்டவேண்டும். சிந்தனையும் உணர்வையும் தூண்டுவனவே கலைப்படைப்புக்களாகக் கருதப்படும். உணர்ச்சிகளின் பிரதிபலிப்பே கலையின் ஜீவன். பொருள் விளங்குமுன் அது உள்ளத்தைத் தொடவேண்டும்.

## இசைக்கலை

கலை எதையும் உணர்வுப் பூர்வமாக அணுகும் பான்மையானது. அதாவது 'aesthetic activity' என்று சொல்லாம். இந்த வகையிலே இசை என்னும் கலைவடிவம் உணர்ச்சிகளோடு மிக நெருங்கிய தொடர்புடையது. லலித கலைகளில் ஒன்று இசைக்கலை. இது கலைகளுள் உயர்ந்தது. பழமையானது. இன்பம் தருவது. இசைக்கு இசையாதவர்கள் இவ்வுலகில் எவருமிலர். இசைக்கலை உணர்வுகளின் மொழியாகும். கேட்போர் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு அவர்தமை நாத வெள்ளத்தில் திளைக்கச்செய்யும் சக்தி படைத்தது. நாதம் செவிக்கு மட்டுமன்றி நமது கருத்துக்கும் இனிமை கூட்டுகிறது.

கலையின் சிறப்புப் புறப்பொருளிலே அவ்வளவாக இல்லை. ஒருவனுடைய உள்ளத்துணர்விலே, எண்ணத்திலேதான் அதைச் சிறப்பாகக் காணமுடியும் என்கிறார் கலை விமர்சகர் "ஹேவல்" (Metha, R.C., 1985). இது இசைக்கு மிகவும் பொருந்துவதான ஒன்றாக அமைகின்றது.

கவின் கலைகளுள் இசைக்கலை பற்றியும் இதன் இருமை பற்றியும் தொல்காப்பியர் தன்னுடைய தொல்காப்பிய நூலின் எழுத்ததிகார நூன்மரபிலே பலஇடங்களிலே குறிப்பிட்டுச்சொல்வதைக் கண்டுகொள்ளமுடிகின்றது (Subrahmanya Sastri, 1999).

பிற உயிரினங்களினின்றும் மனிதனை மொழி எவ்வாறு வேறுபடுத்துகின்றதோ அவ்வாறே இசையும் மனிதனைப் பிற உயிரினங்களிலிருந்து வேறுபடுத்திநிற்கின்றது. இசையானது மானுட சமூகத்திற்கே உரிய சிறந்த கலையாகும். மனிதனின் வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்பு வரை இசை இடம் பெற்றிருப்பதைக் காணலாம். ஆதி மனிதனிடம் அறிவைக் (knowledge) காட்டிலும் உணர்வே (Emotions) மிகுந்திருந்ததாக மானிடவியலாளர்கள் கூறுவார்கள். தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளிலும், முதல் இலக்கியங்களாகக் கருதப்படும் ரிக் வேதமும் மற்றும் பண்டைத்தமிழ் நூல்களும் செய்யுள் வடிவிலே வடிவமைக்கப்பட்டிருப்பதுடன் ஒரு வகை ஓசையுடன் ஓதக்கூடியவையாகவே அமைந்திருப்பதைக் காணலாம்.

கவிதையில் எப்படிக் கவிஞன் வழங்கும் செம்பொருள் தாங்கிய எழிலார்ந்த சொற்கள் கேட்போன் மனதில் படிந்திருக்கும் உணர்வுகளைத்தட்டி எழுப்பிப் பேரின்ப உணர்வை அனுபவிக்கச்செய்கின்றதோ, அப்படியே சாகித்தியத்தில் பொருந்திய ஸ்வரங்களின் அமைப்பு

(Melody) நாதோபாசகனான பாடகனால் உருக்கொடுக்கப்பட்டுச் செவி வழியே பாயும் போது கேட்கின்ற ரசிகனின் உள்ளத்திலே அமைந்துகிடக்கும் நிலையான உணர்வுகளுக்கேற்ப அமைதியான, ஆனந்தப் பரவச நிலையை எட்டிப்பிடிக்கும் ஒரு கனவுலகத்திற்கே இட்டுச்செல்லும் ஆற்றல் வாய்ந்ததாக இசை ஆகிவிடுகின்றது. என்று ரசிகனின் அனுபவத்தைப் பற்றிக் கவி ரவீந்திரநாத் தாகூர் அவர்கள் சிறப்பாகக் கூறி இருக்கின்றார்கள். (Kaanagarathinam, 1945).

சங்கீதமென்பது கீதம், வாத்யம், நிருத்தம் என்ற மூன்றின் கூட்டு என்பர் சாரங்கதேவர் (சங்கீத ரத்தினாகரம்). நிருத்தம், வாத்தியத்தை அனுசரித்தும், வாத்தியம் கீதத்தை அனுசரித்தும் நிகழ்வதால் கீதமும் முதன்மையான இடத்தினைப் பெறுகின்றது. இதை “மார்க்கம்” (Classical Music) என்றும் “தேசி” (Popular Music) என்று இருவகையாகக் கொள்வர்.

ஸ்வரங்களைப் பல வகைகளில் சேர்த்து அவற்றை ஆரோகண அவரோகண முறைகளில் பாடும்போது வெவ்வேறு பாவங்களைக் குறிப்பனவாக இசைவாணர்கள் கண்டு அவற்றை இருபத்திரண்டு ஸ்ருதிகளாகக் கணக்கிட்டனர். அச்சுருதிகளின் பெயர்களிலிருந்தே அவை எப்படிப் பல்வேறு ரச பாவங்களை எழுப்பவல்லன என்பதை நாம் காணலாம். அமெரிக்க உளவியல் நிபுணரான “மாகஸ் சோண்” - Max Schoen ‘இசை கேட்பவரின் உள்ளத்தில் எழுப்பப்படும் உணர்வுகளை வகைப்படுத்தியுள்ளதைக் காணும்போது இசைக்கும் ரசானுபவத்திற்கும் உள்ள இயைபு நம்முன்னோர் கண்டவற்றோடு ஓரளவு பொருந்தியிருப்பதைக் காண முடிகின்றது’ என்கின்றார் (Metha, 1989).

இசை ரசக்கிளர்ச்சிக்குக் காரணமானது என்ற ஒரு கூற்று பல இடங்களிலே காணப்படுகின்றது. மாதவியும் கோவலனும் அகப்பொருட்சுவை மிக்க வரிப்பாட்டுக்களைப் பாடிக்கொண்டு வீணையை வாசித்ததன் விளைவாக அவர்களுள்ளத்தில் அவ்விசை ஏற்படுத்திய உணர்வு மாற்றம் பற்றிய விவரிப்பினை வாசித்தறியும்போது இசைக்கும், ரச வெளிப்பாட்டிற்குமுள்ள நெருங்கிய தொடர்பைக் காணமுடிகின்றது.

## ஆளுமை விருத்தியும் இசையும்

பல்வேறு பண்புகள் கொண்ட சிறந்த ஆளுமையுள்ள பூரண மனிதனை உருவாக்குவதை நோக்காகக் கொண்ட கல்வியின் தேவையை இசை நிறைவு செய்கின்றது. அழகியல் வளர்ச்சியிலே தான் மனிதனின் முழுமையான வளர்ச்சி தங்கியுள்ளது எனக் கிரேக்கத்தின் அறிஞர் பிளேட்டோ கூறுகின்றார்.

இசையானது ஒரு கலாச்சாரத்தினை (Culture), ஆக்கத்திறன் (Creativity), சிந்தனையை (Thoughts), மனத்தொருநிலைப்படுத்தலை (Concentration), சகோதரத்துவத்தை (Comradeship) வளர்க்கின்றது எனலாம். இயல், இசை, நாடகம் என்னும் மூன்றினுள்ளும் இசை நடுநாயகமாகப் போற்றப்படுவதற்குக் காரணம் இசையின் சிறந்த இயல்புகளேயாகும். இசையின் மூலம் உடல்விருத்தி, உளவிருத்தி, நற்பண்புவிருத்தி, நயப்புணர்ச்சி விருத்தி, ஆக்கச்சிந்தனை விருத்தி, வெளியிடும்திறன் விருத்தி (இசையை தமது சொந்தக் கற்பனையில் உருவாக்கும் திறன்), விமர்சனத்திறன் விருத்தி என்பன வளர்க்கப்படுகின்றன.

இனம், மதம், மொழி என்ற வேறுபாடின்றி உலக மக்களை ஒன்றிணைத்து வலிமை வாய்ந்த ஒரு தொடர்பு சாதனமாக இசை இலங்குகின்றது.

படைப்பு ஆற்றல்களை வளர்ப்பதுடன் உணர்ச்சிகளுக்கும் பயிற்சியளிக்கமுடியும். உணர்ச்சிகளை வளப்படுத்தி உள்ளக்கருத்துக்களை வெளியிட உதவும் பல நிலைகளை நுண்கலைப் பாடங்கள் மூலமாகக் கற்பிக்கலாம். மனித உணர்ச்சிகளை வெளியிடவும், நடத்தைகளுக்குப் பயிற்சி அளிக்கவும் இசை பலம் பொருந்திய ஊடகமாக விளங்குகின்றது. இன்பத்தை வெளியிடும் சாதனமாக விளங்கும் இசை துன்பம் ஏற்படும்போது அதனை விலக்கிவிடவும் செய்கின்றது. அதுதான் பாரதி, "துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ இன்பம் சேர்க்கமாட்டாயா?" என்று பாடுகிறார் (Bharathidasan, 1977). மனமுறிவுகளிலிருந்து மீட்சி பெறுவதற்குரிய சீராக்க சாதனங்களுள் இசையின் முக்கியம் இன்று நன்கு உணரப்பட்டு வருகின்றது.

குழந்தைகளுக்குரிய கலைத்திட்டத்தில் இசைக்கு அளிக்கப்படும் முக்கித்துவத்தின் மூலமே அவர்களது ஆளுமையை சிறந்த வகையிலே வளர்த்தெடுக்கமுடியும். ஒருவனது சிந்தனை ஆற்றலானது படைப்பு ஆற்றலை வளர்த்தெடுப்பதுடன் உணர்ச்சிகளுக்கும் பயிற்சியளிக்கக் கூடிய தன்மையைக் கொண்டது. உணர்ச்சிகளை வளப்படுத்தி உள்ளக்கருத்துக்களை வெளியிட உதவும் பல நிலைகளை நுண்கலைப் பாடங்கள் மூலமாகக் கற்பிக்கலாம். மனித உணர்ச்சிகளை வெளியிடவும் நடத்தைகளுக்கு பயிற்சி அளிக்கவும் இசை பலம் பொருந்திய சாதனமாக விளங்குகின்றது.

ஆரம்பக் கல்வி நிலையிலே பிள்ளைகளிடம் இயல்பாகவே தனக்கே உரித்தான முறையிலே சுய வெளிப்பாடுகள் தோன்றும். இந்த சுய வெளிப்பாடானது ஒருவனது அழகியல் வளர்ச்சியில் முக்கிய இடம் பெறுகின்றது என்று அழகியல் கல்வியியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். ஒருவனது ஆக்கசிந்தனை, நயப்பு, திறன்கள், என்பவற்றின் வளர்ச்சியில் இந்த சுயவெளிப்பாட்டின் தாக்கம் அதிகமாகக் காணப்படும் என்கின்றனர். "ஹேபர்ட் ரீட்" என்ற கல்வியியலாளர் கூறுவது போலத் தனது உள்ளத்து உணர்வுகளை வெளிவிடுவதற்கு பிள்ளை உந்தப்படுகின்றான். இந்த வெளிப்பாட்டின் மூலம் மகிழ்ச்சியும், திருப்தியும் உளச்சமநிலையும் பெறுகின்றான் (Jeyarasa, 1998).

பிள்ளை சுதந்திரமாகச் செயற்படும் பொழுது இயல்பாகவே வெளிப்படும் வாய்ச்சத்தங்களும் ஒலிகளும், முகபாவங்களும், பற்பல கோஷங்களும் உபகரணங்களூடாக வெளிப்படுத்தப்படும் சத்தங்களும் பிள்ளை சார்ந்த அழகியல் தொடர்பினை இயல்பாகவே புலப்படுத்துகின்றது. பிள்ளையினது இந்த ஞானத்தையும் கற்பனையையும் ஓர் ஒழுங்கு நிரற்படுத்தி வழிப்படுத்துவதன் மூலம் அவனை ஓர் சிறந்த சிருஷ்டிகர்த்தாக்களாக ஆக்க முடியும். சப்தத்தையும் நாதத்தையும் ஊடகமாகக் கொண்டு பிள்ளை செய்யும் சுயவெளிப்பாடு சிருஷ்டிக்கப்பட்ட இசை எனப்படும்.

இவ்வாறாக ஒழுங்குபடுத்தலின் போது ஒழுங்கமைப்பு, குரல்கட்டுப்பாடு, உணர்ச்சிக் கட்டுப்பாடு எனப் பல வழிகளில் குழந்தை வளப்படுத்தப்படுகின்றான். இது தவிர இசை கேட்டற் செயற்பாடுகளின் மூலம் அவதானம், கிரகிப்பு, மனவொடுக்கம், முதலிய பல சிறந்த பண்புகளை நாம் வளர்த்துக் கொள்ளமுடியும். மற்றும் கற்றலுக்குரிய ஒரு அமைதியான

சூழலை இவன் மனதில் ஏற்படுத்திக்கொள்ளக்கூடிய நிலைமையைக் கேட்டற் செயற்பாடுகள் மூலம் விருத்தி செய்துகொள்ளலாம். ஓடிக்கொண்டிருக்கும் இயந்திரமயமான உலகிலே மன ஆறுதலையும், உளவிருத்தியையும் இந்த இசைக்கலை ஏற்படுத்தி நிற்கின்றது. சிறந்த இரசனை மட்டமுடைய மாணவன் ஆளுமையுள்ளவனாகவும் சிறந்த கற்றலுடன் கூடிய ஒழுக்கமுள்ளவனாகவும் கட்டுப்பாடு விழுமியங்களை இயல்பாகவே பின்பற்றுபவனாகவும் இருக்கக்கூடிய இயல்பினைப்பெற்றவனாக இருப்பான்.

இந்த இசையைக் கூட்டாகவும், தனியாகவும் இசைக்கமுடியும். இது கூட்டிசை என்றும் தனியிசை என்றும் குறிப்பிடப்படும். கூட்டிசையானது குழு இயல்பூக்கங்களுக்கும் உளவியலின் சமூகத்தொழிற்பாடுகளுக்கும் உதவும். சமூகத்தொடர்புகள் யாவை என்றுநோக்கின், குழு இசையில் பல மாணவர்கள் கலந்துகொள்ள வசதி ஏற்படுகின்றது. இதனால் இவர்களது சமூகத்தேவை பூர்த்தி செய்துகொள்ளப்படுகின்றது. சமூகத் தேவை, சமூகத்தொடர்பு என்பது மாணவர்கள் குழுவாக இயங்கும் போது தலைமை தாங்கும் விருப்பம், வெற்றி தோல்விகளைச் சமமாக எண்ணும் பண்பு, கீழ்ப்படிதல் முதலியனவாகும். ஒரு பிள்ளையின் அடிப்படைத்தேவைகள் பூர்த்தியாகும்போதுதான், அப்பிள்ளை முழுமையான ஆளுமையுள்ளதாக வளர முடியும். பிள்ளையின் பொதுவான வளர்ச்சிக்கு இசை ஓரளவு உதவினாலும் அதன் உளவளர்ச்சிக்கு இசை பெரிதும் உதவுகின்றது என்பது உளவியலாளர்களின் உறுதியான கருத்தாகும்.

சங்கீதம் பாடும்போது ஒருவர் தமது சாரீரத்தைக் கட்டுப்படுத்தித் தாள லயம் பிசகாது ஸ்வர அட்சரம் கலையாது சங்கீத விதிமுறைகளுக்கு ஏற்ப இசைக்கவேண்து கலைத்துவ விதி. ஆகவே சங்கீதப்பயிற்சி ஒருவரிடத்திலே அத்தகைய தற்கட்டொழுங்கை ஏற்படுத்த முக்கிமான ஒரு காரணியாக விளங்குகின்றது. தற்கட்டொழுங்கு ஒருவரின் ஆளுமை வளர்ச்சிக்கு அவசியமான பண்பாகும்.

சங்கீதப் பயிற்சி இன்னும் பல திறமைகளை ஒருவரிடத்திலே ஏற்படுத்தும். கற்றலுக்கு உதவும் காரணிகளில் அவதானம், கற்பனை, ஞாபகம் ஆகியவை முக்கிமானவை. இக் காரணிகள் வளர்ச்சியடைவதற்குச் சங்கீதப்பயிற்சி பெரிதும் உதவும். சங்கீதம் கற்கும்போது பல உருப்படிகளை மனனம் செய்வதால் ஞாபகத்தன்மையின் திறன் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படுகின்றது. கற்பனாஸ்வரங்கள் பாடுதல் என்பது சங்கீதத்தில் மிக முக்கிமான ஓர் அம்சமாகும். சாரீரச் சாதனைகள் ஒருவரிடத்தில் அவதானத்தையும், தற்கட்டொழுங்கையும், தனது சக்தியை சுயமாக நெறிப்படுத்தும் பண்பையும் வளர்க்கின்றன. கற்பனை மட்டும் பிறரிடத்தில் உணர்வுகளைத்தூண்ட உதவுவது. தனது எண்ணக்கருவை மீளுற்பத்தி செய்யும் திறன் கலைஞனுக்கு இருக்கவேண்டும். எனவே தனது அனுபவம் தந்த உணர்வை வெளிப்படுத்த உகந்த வடிவத்தை அவன் அறிந்திருக்கவேண்டும். எனவே எண்ணக்கருவை மீளுற்பத்திசெய்வதற்கு நுட்பம் அவசியம். இந்த நுட்பங்கள் காலத்தால் விருத்தி செய்யப்பட்டுள்ளன.

அனைத்துக் கலைகளுக்கும் பொதுவாக கருதப்படும் கோட்பாடுகளான ஐக்கியம் (Unity), இசைவினை (Coherence), அழுத்தமும் தெரிவும் (Emphasis and Selectivity), அளவுப்பரிமாணம்

(Proportion), மீள் ஒழுங்கு (Proportion), செறிவாக்கம் (Intensification) என்பன இசைக்கலைக்கும் பொருந்துவதாய் அமைந்து அதன் அம்சங்களைத் தெளிவுபடுத்துகின்றது.

"கலை எனப்படுவது உணர்வின் வெளிப்பாடு. அது உணர்வை வெளியிடுவதுடன் பிறருக்கும் அவ்வுணர்வை ஊட்டும் பெருமையுடையது" என்பார் டால்ஸ்டாய். ("Art is the language of feeling; it is not only expression but also transmission if feeling". (Roshmai Goswami, 1992).

## முடிவுரை

வாழ்க்கை என்பதே கலையாக மிளிரவேண்டும். இசை மனிதத்தன்மையின் மேல்நிலைக்கு இட்டுச்செல்வதாக இருக்கவேண்டும். கலையின் முக்கிய குறிக்கோள் பொழுதுபோக்கிற்காக அமைந்து இன்பம் பயப்பதாகவோ அறிவூட்டுவதாகவோ இருப்பதல்ல. நம்மையறியாமலே நம்மிடம் ஆத்ம சுத்தியை ஏற்படுத்துவது. இதன்மூலம் ஒரு ஆளுமை மிக்க சமூகத்தினைக் கட்டியெழுப்புவதுமாக அமையவேண்டும். இசை என்பது வெறும் ஒலி மட்டுமல்ல! கற்பனை வீதியிலே வரும் உணர்ச்சியாத்திரையுமல்ல. சங்கீதம் கலைஞர்களுக்கு மட்டுமல்ல சமூகத்திற்கும் ஒரு உயிர் கொடுக்கும் ஜீவனாக இருக்கின்றது. இசையின் பௌதிக மூலங்கள் நமக்கு உணர்த்தும் உண்மை இதுதான்.

## References

Bharathidasan, 1977, Bharathidasan Kavithaigal, Paari Nilayam, Chennai, India.

Jeyarasa, S.B., 1998, Music and Society, Semamadu Pathippagam, Colombo, Sri Lanka.

Kaanagarathinam, K., 1945, Ilakecari newspaper, Kalai Mugam, Colombo, Sri Lanka.

Metha, R.C., 1985, Essays in Musicology, Indian Musical Society, Bombay & Baroda, India.

Metha, R.C., 1989, Essays in Musicology, Bombay - Indian Musical Society, Bombay & Baroda, India.

Roshmai Goswami, 1992, Man and Music in India, Indian Institute of Advanced Study, Munshiram Manoharlal Publishers Pvt.Ltd, New Delhi, India.

Tolkappiyar, P.S., Subrahmanya Sastri (1999), Tolkapiyam: Porulatikaram, Kuppuswami Sastri Research Institute, Chennai, Tamil Nadu, India.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2020. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License